Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உங்கள் கேள்வி

ஸ்ரீ சாய்பாபாவின் விடை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



உங்கள் கேள்வி
ஸ்ரீ சாயிபாபாவின் விடை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வெளியிட்டோர் : புஷ்பா லேலே

மொத்த உரிமை : A/12, பூனாவாலா மேன்ஷன், கேலேவாடி, டாக்டர் பாலேராவ் மார்க், கிர்காவ்ன், மும்பை – 400 004. தொலைபேசி எண் : 23887721.

குறிப்பு : இந்நூல் ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம், மலையாள மொழிகளிலும் கிடைக்கும்.

தமிழ் மொழியாக்கம் : டாக்டர் S. சுந்தரம் ஸ்ரீ கிருபா, 19/11, இராமசாமி தெரு, இராதா நகர், குரோம்பேட்டை, சென்னை–44.

முக்கிய அறிவிப்பு :

இந்நூலை பதிப்பிப்பதற்கோ, எந்த மொழியிலாயினும் மொழி பெயர்ப்பதற்கோ ஆன முழு உரிமை மாதவ் லேலே அவர்கட்கே உண்டு. இதை மீறிச் செயல்படுபவர்கள் மீது சட்டப்படி வழக்கு தொடரப்படும்.

விலை : ரூ. 30/–

கணினி வடிவம் : ஸ்வஸ்திக்ஸ் டிஜிட்டல் டெக்னாலஜீஸ் பி. லிமிடெட் எண் : 35–A, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை – 600 017.

அச்சிட்டோர் :

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

।। ஸ்ரீ சாயிநாத் பிரசன்னா ।।

சுமார் நூறாண்டுகளுக்கு முன் ஸ்ரீசாயிநாத மஹராஜ் ஷீரடியில் வாழ்ந்தார். அவர் கடவுளின் அவதாரமான போதிலும், ஒரு சாதாரண மனிதனைப் போலவே மக்களிடையே உலவினார். உலகியல் முற்றும் அவர் அறிந்திருந்தார். வாழ்க்கையின் உண்மையான பொருள் என்ன என்பதை, அவர் அருகில் வாழ்ந்த அதிர்ஷ்டசாலிகளான சிலருக்கு, அவர்கள் எல்லையில்லா இறுதி இன்பத்தை அடைய வேண்டுமென்று உபதேசித்தார். உலகப் பொருள்களில் அவருக்கு நாட்டம் ஒரு சிறிதும் இல்லை. அவர் மக்களைப் பாகுபடுத்திப் பார்த்ததும் இல்லை. அனைவரும் சமூகத்தில் மனிதர்களாக வாழவேண்டும் என்றே அவர் கற்பித்தார்.

முழுக்க முழுக்க ஸ்ரீசாயிநாத மஹராஜ் ஷீரடியில்தான் வாழ்ந்தார்; என்னும் மற்றவர் இல்லங்களுக்குச் செல்லும் வழக்கம் அவருக்கு இல்லை. அவர் த்வாரகாமாயீ என்றழைக்கப்படும் இடத்திலோ அல்லது சாவடிக்கு அருகாமையிலோ தங்கியிருப்பது-தான் வழக்கம். மக்கள் கூடும் பூனிதமான இடங்களிலும் அவர் காணப்பட்டதுண்டு. அனேக பக்தர்கள் பிரச்சினைகளோடும் மனதில் கேள்விகளோடும் அவரைச் சந்திப்பர். தங்கள் மனதில் கேள்விகளோடும் அவரைச் சந்திப்பர். தங்கள் மனதில் உள்ள கேள்விகளை வெளியிடுமுன்பாகவே, (பக்தர்களைக் கண்ட மாத்திரத்திலேயே) ஸ்ரீசாயிநாத மஹராஜ் அவர்கட்குத் தீர்வுகளைக் கூறிவிடுவார். சிலரை ஸ்ரீராமாயணம் படிக்குமாறும் சிலரை ஸ்ரீகண்டோபா கோயிலுக்குச் சென்று வழிபாடுமாறும் அவரவர்க்கு ஏற்ற முறையில் அறிவுறுத்துவார். சிலரை அன்னதானமும், சிலரை வேறு தானங்களும் செய்யுமாறு பணிப்பார். அனைவரையும் தன் அறிவுரைகளால் மனநிறைவடையச் செய்வார். மனக்கலக்கத்தோடும் மனதில் ஐயங்கள், கேள்விகளோடும் வரும் அடியார்களுக்கும் தகுந்த விடையளித்து மகிழ்வும் அமைதியும் அடையச் செய்வார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சில நேரங்களில் பக்தர்களின் காணிக்கைகளை அவர் ஏற்றுக் கொண்டதுண்டு. ஆனால் அவற்றை ஒன்றுக்கு ஆயிரம் மடங்காக அவர்கட்குத் திருப்பி அளிப்பார். அவர் யாரிடமும் ஒரு பொழுதும் கடன்பட்டதில்லை. ஏழைகட்குச் சேவை செய்வதும், அன்னதானம் செய்வதும் அவருக்கு மிகவும் விருப்பமான செயல்பாடுகள். ஸ்ரீதாஸ்கணு மஹாராஜ் அவர்களால் ஸ்ரீசாயிநாத மஹாராஜின் புகழ் இந்தியாவெங்கும் பரவியது. ஸ்ரீகோவிந்த ரகுநாத் டபோல்கர் ஸ்ரீசாயிநாதரின் வாழ்க்கை வரலாற்றை ஒப்பற்ற ஒரு நூலாக, "ஸ்ரீசாயிநாத் ஸத்சரித்ரா" என்ற பெயரில் மராத்திய மொழியில் எழுதியுள்ளார். இதற்காக மக்கள் அவருக்குக் கடமைப் பட்டுள்ளனர்.

ஸ்ரீசாயிநாதரிடம் எல்லையற்ற அன்பில் ஸ்ரீடபோல்கரை நான் பின்பற்றுபவன். இது தொடர்பாக காலஞ்சென்ற ஸ்ரீகேசவ்ராவ் ஸாதேயின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. இதனால் என் மகிழ்ச்சி கூடியது. வாழ்க்கையில் ஏற்ற தாழ்வுகளில் எப்படி மகிழ்வோடு ஒரே மாதிரி இருப்பது என்பதை அவர் எனக்கு விளக்கினார். ஸ்ரீசாயிநாதருக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். எப்பொழுதுமே அவருக்குச் சேவை செய்து கொண்டிருக்க அவர் ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்று அவரை நான் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

மாதவ் லேலே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

!! ஸ்ரீ சாயிநாத் பிரசன்னா !!

இதை முதலில் கவனமாகப் படிக்கவும்

மனம்போல் வாழ்வு.

அன்புள்ள வாசகர்களே! இந்நூலில் உள்ள ஸ்ரீசாயநாத மகராஜின் விடைகள் எங்கள் இல்லத்தில் இருந்தன. நானும் எனது குடும்பத்தினரும் சிக்கலான பிரச்சினைகள் உள்ள நேரங்களில் இவற்றிலிருந்து வழிகாட்டுதலைப் பெற்றதுண்டு. இந்த விடைகளில் எனக்கு வலுவான நம்பிக்கை உண்டு. இது ஒருபொழுதும் தவறாகாது என்று நான் உணர்கிறேன். இதைப் பற்றித் தெரிந்த எனது சில நண்பர்கள், தீர்வு தேடி (எங்கள் வீட்டிற்கு) வந்து இவ்விடைகள் மூலம் நன்மை பெறுவது வழக்கம்.

தன் சகோதரர் ஒருவர் ஒரு பெண்ணுடன் நான்கைந்து ஆண்டுகளாகத் தகாத முறையில் பழகி வந்ததாக, எனக்குத் தெரிந்த பெண் ஒருத்தி கூறினார். சகோதரருக்கு அப்பெண்ணை மணந்து கொள்ளும் எண்ணம் எதுவும் இல்லை என்றும் கூறினாள். இதனால் அவள் குடும்பத்தினர் பெரிதும் அவமானத்துக் குள்ளாயினர் அவள் கூறியதை நான் கேட்டுக் கொண்டேனே தவிர, அதற்கான தீர்வு (அ) விடை என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே, நாங்கள் ஸ்ரீசாயிநாத மகராஜிடம் இப்பிரச்சினையை எடுத்துச் சென்று வழிகாட்ட வேண்டினோம். "ஸ்ரீசத்யநாராயண பூஜையின்போது பிரசாதமாக விநியோகிக்கப்படும் இனிப்புப் பலகாரங்களைப் பெற்றுப் பயன் பெறுக. பிறகு எல்லாம் சரியாகும்!" என்று விடை கிடைத்தது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மேற்கொண்டு விசாரித்ததில் அக்குடும்பத்தினர் சென்ற ஆண்டில் ஸ்ரீசத்யநாராயண பூஜைக்கு ஏற்பாடு செய்திருந்த தாகவும் ஒரு அண்டை வீட்டுக்காரர் மரணத்தினால், அப்பூஜை நடைபெறமால் தடைப்பட்டு நின்று போனதாகவும் தெரிந்தது. உடனே, அப்பெண் ஒருவார காலத்துக்குள் தன் வீட்டில் ஸ்ரீசத்யநாராயண பூஜைக்கு ஏற்பாடு செய்தாள். வழிபாடு முடிந்து இனிப்புப் பிரசாதங்கள் அனைவர்க்கும் வழங்கப்பட்டன. உடனேயே அந்த நபர், தான் பழகிவந்த பெண்ணைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டார். இப்பொழுது அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.

இன்னொரு சம்பவத்தில், ஒரு பையனைத் தகுந்த காரணம் இன்றி, போலீசார் கைது செய்து விட்டனர். அப்பையனின் சகோதரி அவனை விடுவிக்க எவ்வளவு முயற்சி செய்தும் பயன் இல்லை. பிறகு, ஸ்ரீசாயிநாதரிடம் கேட்டபொழுது, ரூபாய் பத்து மதிப்புள்ள அன்னதானம் செய்ய வேண்டும் என விடை கிடைத்தது. அதைச் செய்து முடித்த உடனேயே அப்பையன் எந்தச் சிக்கலும் இல்லாமல் உடனடியாக விடுவிக்கப்பட்டான்!

ஒருவர் தன் வீட்டை ரூபாய் இருபதாயிரத்துக்கு விற்பதாக முடிவு செய்திருந்தார். அதற்குமேல் அதை யாரும் வாங்க முன்வர மாட்டார்கள் என்று அவர் நினைத்தார். அதற்குமுன் அவர் என்னைப் பார்க்க வந்தார். நாங்கள் இப்பிரச்சினையை ஸ்ரீசாயிநாதர் முன் வைத்தோம். இரண்டு நாட்களுக்குக் காத்திருக்கும்படியும், வருகின்ற கடிதத்தின்படி நடக்க வேண்டுமென்றும் விடை கிடைத்தது. இரண்டு நாட்களில் நாக்பூரிலிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. "நான் இந்த விவகாரத்தை முடிக்க மும்பை வந்து கொண்டிருக்கிறேன்" என்பது செய்தி. பிறகு அந்த நபர், மும்பை ஆசாமிக்கு அவ்வீட்டை விற்றதில் அவருக்கு மேற்கொண்டு ஏழு அல்லது எட்டாயிரம் ரூபாய் கிடைத்து.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai.
மற்றொரு நண்பர் ஒருவர் என் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் ஸ்ரீசாயிநாதரிடம் ஒரு கேள்வி கேட்டார். "ஏற்கனவே வாக்குறுதி அளித்த இரண்டையும் நிறைவேற்று!" என்பது ஸ்ரீசாயிநாதர் பதில்! எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் என் நண்பரோ ஸ்ரீசாயிசாதர் கூறியது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டார். "ஒரு நிலம் விற்ற விவகாரத்தில் எனக்கு சுமார் பத்தாயிரம் ரூபாய் கிடைத்தது. அதன் தொடர்பாக நான் இரண்டு வேண்டுதல் வாக்குறுதிகள் தந்திருந்தேன். அவை இன்னும் நிறைவேற்றப்படாமல்தான் உள்ளன!" என்றார் அவர்.

ஒரு சமயம், சுமார் பத்து கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று காணாமல் போய் விட்டது. அது என் நண்பரின் மனைவியுடையது. ஸ்ரீசாயிநாதரிடம் கேட்டபொழுது கிடைத்த விடை: "பால் வாங்கி வழங்கு: உன் கவலை தீரும்!" அதைச் செய்த உடனேயே மோதிரம் கிடைத்து விட்டது!

எனக்குத் தெரிந்த ஒரு நபர் ஸ்ரீசாயிநாதரின் இத்தகைய விடைகளைப் பற்றி அறிய ஆவல் கொண்டு என்னைப் பார்க்க வந்தார். அவர் மனத்தில் இருந்த கேள்விக்கு ஸ்ரீசாயிநாதரின் பதில் "எல்லா வேலையும் பௌர்ணமியன்று முடியும்!" என்பது தான். ("இதெல்லாம் உண்மையா? என்ற அளவில்தான் அந்த நபர் கேள்வி எழுப்பினார்). ஆயினும் அவர் "அடுத்த நாளே வேலை நிறைவேறிவிடும் என்றும் தொடர்புடையவர்கள் எல்லாம் அடுத்த நாளே வக்கீல் வீட்டில் சந்திக்க இருப்பதாகவும் ஒரு பிரச்சினையும் இல்லை" என்றும் கூறினார். பௌர்ணமிக்கு இன்னும் பன்னிரண்டு நாட்கள் இருந்தன. நான் பதில் ஏதும் கூறவில்லை. ஏனெனில், விடை ஸ்ரீசாயிநாதருடையது! பிறகு ஒருநாள் அந்த நபர் வந்து எவ்வளவு முயற்சி செய்தும் அவ்வேலை குறிப்பிட்டபடி நடவாமல், பின்னர் பௌர்ணமியன்றுதான் முடிந்தது என்று கூறினார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீசாயிநாதரின் ஆற்றல்மிக்க விடைகளைக் கொண்ட இந்த நூல், அனைவர்க்கும், சமூகத்துக்குப் பயன்பட வேண்டும் என்றும், அதனால் இதை அச்சேற்றிப் பிரசுரிக்க வேண்டும் என்றும், என் நண்பர்கள் பலர் விரும்பினார்கள். எனக்கும் அப்படிதான் தோன்றியது. மிகுந்து தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நான் (இது பற்றி) ஸ்ரீசாயிநாதரைக் கேட்ட பொழுது "சும்மா இரு; ஸ்ரீசாயிநாதரை நினை!" என்று விடை கிடைத்தது! ஆகவே, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நான் சும்மா இருந்து விட்டேன்.

மூன்று ஆண்டுகள் கழித்து, மீண்டும் ஸ்ரீசாயிநாதரை, இதே கேள்வியோடு அணுகினேன். "கவலைப்படாதே! அனைவருடைய ஒத்துழைப்பும் கிடைக்கும்!" என்று பதில் வந்தது. இதையே ஊக்கமாகக் கொண்டு இப்புத்தகத்தை அச்சேற்ற முயற்சிகள் செய்தேன். எனக்குத் தெரிந்த ஒருவர், இதற்கான செல்வைத் தான் ஏற்பதாகக் கூறினார். ஆயினும் அப்படி ஏற்க, ஏழெட்டு சட்டபூர்வ நிபந்தனைகளுக்கு நான் உட்பட வேண்டும் என்று கூறிவிட்டார். நானும் அதை ஏற்று, "ஆயினும் நாம் ஸ்ரீசாயிநாதரின் அனுமதியால் இதை உறுதி செய்யலாமே! என்றேன். இந்த ஏற்பாடு ஸ்ரீசாயிநாத மகராஜுக்கு உடன்பாடா என்று தெரிந்து கொள்வது அவசியம் அல்லவா? கேள்விக்கு விடை: "இப்படி நீ ஏற்பாடு செய்தால் நீ நோய்வாய்ப்படுவாய்!" பணிவோடு, அந்த நபரிடம், "எனக்குச் சம்மதமில்லை" என்று தெரிவித்து விட்டேன்.

எனது நண்பர்களில் ஒருவர் வண்ணம் பூசும் தொழில் செய்பவர். ஒருமுறை தனது சகோதரிக்கு எப்பொழுது திருமணமாகும் என்று அவர் கேட்டார். "உனக்கு ஸ்ரீபாண்டுரங்கனின் தரிசனம் பண்டரிபுரத்தில் கிடைக்கும். நான்கு நபர்கள் சந்தித்துப் பேசுவார்கள் பிரயாணம் நடைபெறும்..." என்றெல்லாம் விடை கிடைத்தது. எனது நண்பர். "இதெல்லாம் திருப்தி அளிப்பதாக இல்லை; எனக்கு நம்பிக்கை இல்லை" என்று கூறிவிட்டார். விடை கூறியவர் ஸ்ரீசாயிநாத மஹராஜ். இதில் நான் சொல்ல என்ன இருக்கிறது. எனவே நான் ஒன்றும் கூறுவில்லை. இதைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை. தேநீர் அருந்திய பிறகு அரை, அணி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நேரம் கழித்து, அந்த நண்பர் கூறினார்: "ஒரு பணக்காரர் ஸ்ரீபாண்ரங்களின் சிலைக்கு வண்ணம் பூச என்னை அழைத்துள்ளார். (ஆஷாட) ஏகாதசி அண்மையில் வருவதால் பகவான் ஸ்ரீபாண்டுரங்கனின் உருவத்துக்கு வண்ணப்பூச்சு செய்கிறார்கள். இதையே பண்டரிபுர ஸ்ரீபாண்டுரங்க தரிசனமாக நான் கருதுவதா?" என்று என்னைக் கேட்டார்!

நான் முதலில் ஒன்றும் பேசவில்லை. கடவுளை வணங்கினேன்; பிரார்த்தித்தேன். ஸ்ரீசாயிநாத மஹராஜை நினைத்து பிரார்த்திதேன். பிறகு கூறினேன்: "மனம் போல் வாழ்வு!"

மாதவ் லேலே
(முதல் வெளியீட்டாளர்)

குறிப்பு :

1) இந்த (நூலில் தரப்பட்டுள்ள) விடைகளை உணர்ந்து, அனுபவிக்க வேண்டும். இவை விளையாட்டாக எடுத்துக் கொள்வதற்காக அல்ல.

2) உங்கள் அனுபவங்களை நூல் வெளியீட்டாளர்க்கு, தயவு செய்து, தெரிவிக்கவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உங்கள் கேள்விகளுக்கான விடைகளை எப்படித் தேடுவது?

நீங்கள் ஷிரடிக்குச் சென்று ஸ்ரீசாயிநாத மஹராஜைத் தரிசிப்பதாக நினைத்துக்கொண்டு "ஸ்ரீசாய்!" என்று (பக்தியோடு) உச்சரிக்கவும். கேள்வியை மனத்தில் கொண்டு, அதற்கான விடையைக் கூறி ஸ்ரீசாயிநாத மஹராஜ் உங்களை வழி நடத்துவாராக என்று வேண்டிக் கொள்ளவும்.

ஒன்று (1) முதல் எழுநூற்று இருபது (720)க்குள் ஏதாவது ஒரு எண்ணை மனத்தில் நினைத்து அதற்கான விடையைப் பெறவும்.

- அடுத்த கேள்விக்கு, புதியதாக இன்னொரு எண்ணை நினைத்து, அதற்கான விடையைப் பெறலாம்.
- இதனை ஒரு சிறுபிள்ளைத்தனமாகவோ அல்லது விளையாட்டாகவோ பரிசோதிக்க வேண்டாம்.
- கிடைத்த விடையின்படி நடந்து கொண்டால், அவர் கூறியபடி நற்பயனை அனுபவிப்பீர்கள்.

மிக அழ்ந்த பிரார்த்தனைக்குப் பிறகும் விடைக்கான எண்ணை உங்களால் தேர்ந்தெடுக்க இயலவில்லை என்றால் ஒரு சிறு பாத்திரத்தில் சிறிதளவு தானியத்தை ஸ்ரீசாயிநாதர் முன்பாக வைத்து வழிபடவும். பிறகு, அதில் சிறிது கையில் எடுத்துத் தனியாக வைத்து அதை எண்ணிப் பார்க்கவும். பிறகு அந்த எண்ணுக்கான விடையைப் பார்க்கவும். அந்தத் தானியங்கள் எல்லாவற்றையும் பிறகு பறவைகளுக்கு அளித்து விடவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

॥ ஸ்ரீ சாயிநாத் பிரசன்னா ॥

விடைகள்

1. சுபமான நிகழ்ச்சிகள் நடைபெறும். துன்பங்கள் மறையும். நீ விரும்பிய வேலை முடிவுறும்.
2. நீ தேர்வில் வெற்றி பெறுவாய். தெற்கு திசையிலிருந்து கிடைக்கும் உதவியின் மூலம் நீ வெற்றியடைவாய்.
3. பெற்றோர்களின் ஆசியினால் நீ வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பாய்.
4. கெட்ட நடவடிக்கைகள் மறைக்கப்படும்; நன்னடத்தை மதிக்கப் படும். ஸ்ரீசிவபெருமானையும், ஸ்ரீதத்தாத்ரேயரையும் வழிபடவும்.
5. ஸ்ரீசாயிநாதரை நினைவில் கொள்; உன் துன்பங்களிலிருந்து உனக்கு விடுதலை கிடைக்கப் பெறுவாய். "ஸாயிஸமாத்தீ" என்று ஜபிக்கவும். இருபத்தோரு நாட்களில் நன்மையடைவாய். ஸ்ரீசிவபெருமானை நீ உன் கனவில் காணலாம்.
6. நீ யாரோ ஒருவரைச் சந்திப்பாய்; இழந்த பொருளை மீண்டும் அடைவாய். பிரயாணம் செய்ய வேண்டி வரலாம்.
7. உனது இஷ்ட தெய்வத்தை நினைத்துக்கொள். அதனால் உனது துயரம் மறையும். எந்த ஆதாயத்தையும் எதிர்பார்க்காமல் புதிய வேலையைத் தொடங்கு.
8. சட்டப்படி வழக்குத் தொடுத்து, எதிரியை வெற்றி கொள். ஸ்ரீ சாயிபாபாவின்மேல் உனக்கு நம்பிக்கை இருந்தால் உனக்கு உடனடி அனுபவம் கிடைக்கும். கோதுமை மாவை பிறருக்கு விநியோகிப்பதால் உனக்கு நற்பயன் விளையும்.
9. மக்கள் உன்னைப் பற்றி விவாதிப்பார்கள். சிறு முயற்சி மட்டும் செய்வாயானால் ஸ்ரீசாயிநாதர் ஆசியால் உனது துன்பங்கள் முடிவுறும்.
10. மெல்ல மெல்ல உனது துன்பங்கள் முடிவுக்கு வரும். உனக்கு கஷ்டங்களிலிருந்தும், நோயிலிருந்தும் விடுதலை கிடைக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

11. ஸ்ரீசாயிநாதரிடம் சரணடைந்த உடனேயே உனக்கு மகிழ்ச்சி பெருகும். நீ செய்யும் வேலையில் தன்னிறைவு அடைவாய். தேர்வில் வெற்றி பெறுவாய். உனக்கு வேலை கிடைக்கும்.

12. உனது உள்மனத்தைப் புரிந்து கொள்வது கடினம்; உறுதியாக இரு, நீயே முயற்சி செய்; வெற்றி பெறுவாய்.

13. பெரிய விஷயங்களை சாதிப்பாய்; ஏதோ உரு பழைய பொருள் (உனக்கு) மிகுந்த உதவியாக இருக்கும்.

14. அன்றாட வாழ்க்கை நடைமுறையில் ஜாக்கிரதையாக இரு. நீ வெற்றியடைவாய். நண்பனின் அறிவுரை உனக்கு பயனளிப்பதாக இருக்கும்.

15. பொருட்களின் ஒரு தொகுப்பு உன்னிடம் இருக்கும். புதிய பொருள் சேரும். நன்கொடையளிப்பதன் மூலம் நன்மை பெறுவாய். நெருங்கியவர்களிடமிருந்து முக்கியமான கடிதங்கள் வரும்.

16. நீயாக முயற்சி செய்ய வேண்டாம். மற்றவர்களின் ஒத்துழைப் போடு வேலை முடிந்துவிடும். உனக்குப் புகழ் கிட்டும்.

17. உனது ஆவணங்களைப் பத்திரமாகப் பார்த்து பாதுகாத்துக் கொள்ளவும். அதனால் நன்மையடைவாய். நண்பர்களின் உதவி கிடைக்கும். மற்றவர்களுக்கு மதிப்பும் முக்கியத்துவமும் அளிப்பதன் மூலம். நீ பெரிய விஷயங்களைச் சாதிப்பாய். பிரயாணத்துக்கு வாய்ப்புண்டு.

18. தகராறுகள் ஏற்படும். முன்பே ஸ்ரீ தத்தாத்ரேயரிடம் நீ செய்த பக்தி உனக்கு உதவும்.

19. உனக்கு உடல்நலக் குறைவு ஏற்படும். தியானம் செய், வீட்டில் நாமகரணி (பெயர் சூட்டும்) விழா நடக்க வாய்ப்புண்டு.

20. ஆன்மீக ஸ்தலங்களுக்கு நண்பர்களுடன் சென்று வர வாய்ப்பு உண்டு. உனக்கு மன நிம்மதி ஏற்படும்.

21. மற்ற மதத்தைச் சார்ந்த நபர்களால் உன் வேலை செய்யப்படும். முன் அறிவிப்பின்படி நடந்து கொள். வேலை நன்கு முற்றுப்பெறும்.

22. புனித ஸ்தலங்களுக்குச் சென்று வருவாய். சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உனக்கு இலாபம் கிடைக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

23. வீண் விவாதங்களைத் தவிர்க்க வேண்டும். குருவைச் சரணடை.

24. தகராறுகள் முடிவுக்கு வரும். உனது முன்னாள் கௌரவம், உரிமை மீட்கப்படும்.

25. புதிய திட்டங்கள் வகுக்கப்படும்; புகழ் கிட்டும்; தவறுகள் உணர்ந்து கொள்ளப்படும். புதியவற்றைத் தெரிந்து கொள்வாய்; வெற்றியடைவாய்.

26. அமைதியாக இரு. அதுவே நன்மை பயக்கும். துன்பங்கள் ஒரு முடிவுக்கு வரும்.

27. எண்ணியதைவிட அதிக வெற்றியடைவாய். ஸ்ரீ சாயியை நினைவில் கொள். புகழ் கிடைக்கும். கவலைகள் பறந்தோடும்.

28. உனது நண்பர்களிடமிருந்து உதவி கிட்டும். நோயிலிருந்து விடுபடுவாய். வேலையைப் பகிர்ந்து கொள். வெற்றியடைவாய்.

29. நீ எழுதுவதற்கு ஏற்றுக் கொள்வாய். வேலையில் வெற்றி உண்டு. பலர் உதவி கிடைக்கும்.

30. ஸ்ரீசாயியின் அருளாசியால் உன் கவலைகள் மறைந்து நீ வெற்றியடைவாய். நோய்களிலிருந்து விடுபடுவாய்.

31. உலகியல் தொடர்பான பொருட்களில் நீ ஆர்வம் காட்டுவாய். ஞானிகளின் தரிசனத்தில் உனக்கு தெய்வ தரிசனம் கிட்டும். ஸ்ரீசாயிநாதரை நினைவில் கொள். அது உனக்கு மகிழ்ச்சியை அளிக்கும். நீ வெற்றியடைவாய்.

32. ஒரு குழந்தை பிறக்கும். கவலைகள் யாவும் மறையும். கூடுதல் வேலையால் பொருள் ஈட்டுவாய்; ஸ்ரீசாயிநாதரின் ஆசி உண்டு.

33. கெட்ட சகவாசத்திலிருந்து விலகு; உலகியல் பொருட்களில் உனக்குள்ள ஆசை ஒரு முடிவுக்கு வரும். தகராறுகளை, விவாதங்களைத் தவிர்க்கவும்; உனக்கு நன்மை உண்டு.

34. ஸ்ரீசாயிநாதரிடம் சரண் புகுந்தால் உனது கவலைகள் இருந்த இடம் தெரியாமல் மறையும். வெகுவிரைவில் உனக்கு வெற்றி கிடைக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

35. பணிவோடு இரு. இல்லாவிடில் உன்னுடன் யாரும் இருக்க மாட்டார்கள். உன்னைக் கட்டுப்படுத்திக் கொள். உடலளவில் சண்டையிடாதே.

36. அமைதியாக இரு. ஸ்ரீசாயிநாதரை நினை. எதிரிகள் பலவீனம் அடைவர்.

37. வேறுபாடு காட்டாதே. கெட்ட எண்ணங்களால் நன்மை விளையாது. ஸ்ரீசாயிநாதரை நினைத்து வேலையைத் தொடங்கு. வெற்றி உனதே.

38. வாழ்க்கையை நடத்தப் போதுமான ஒரு வேலை கிடைக்கும். இறுதியில் நீ மகிழ்ச்சி அடைவாய்.

39. தொழிலில் வெற்றி உண்டாகும். ஸ்ரீசாயிநாதரின் ஆசியின் மகத்துவத்தை நீ புரிந்து கொள்வாய்.

40. ஸ்ரீசாயிநாதரை நினைவில் கொண்டால் வெற்றி உண்டு. உனது கவலைகள் முடிவுக்கு வரும். நல்ல செய்தி வரும்.

41. இறுக்கமான சூழ்நிலைகள் ஒன்றாகத் தோன்றும். இது சற்று கெட்ட காலமானாலும், ஓர் ஆன்மிகப் பெரியவரை நீ விரைவில் காண்பாய், உனக்கு வெற்றி உண்டு.

42. மதம் தொடர்பான நூல்களைப் படிப்பாய்; எழுதுவாய், மதம் தொடர்பான செயல்பாடுகள் நிகழும், சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

43. ஆன்மிகத் தொடர்புடைய ஷீரடி போன்ற ஸ்தலங்களுக்குச் செல்வாய். ஒரு தூய மனிதரைச் சந்திப்பாய். விரைவில் வெற்றி உண்டு.

44. ஸ்ரீசாயிநாதர் எல்லாம் அறிவார். ஆகவே அவரிடம் சரணடைக. அவர் உன்னைக் கவலைகளிலிருந்து விடுவித்து வெற்றி அளிப்பார். வேண்டியவை காலையிலும், பிற்பகலிலும் நடக்கும்.

45. விரைவில் ஷீரடிக்கு வர வாய்ப்பு கிடைக்கும். ஸ்ரீசாயிதர்சன் கிடைக்கும். வெற்றி உண்டு.

46. ஏழு நாட்களுக்குள் ஆதாயம் ஏற்படும். தியானம் செய். பண்டரீபுர பாண்டுரங்கனின் தரிசனம் கிடைக்கும். ஸ்ரீசாயி அங்கிருப்பதை நம்பு. உணர்ந்து கொள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

47. உன் இஷ்ட தெய்வத்தின் தரிசனம் கிடைக்கும். கடவுளின் சிலை (அ) விக்கிரகம் (அ) புகைப்படம் கிடைக்கும். அதை வழிபடு. உனக்கு மனநிம்மதி, பணவரவு, மகிழ்ச்சி ஏற்படும்.

48. மூதாதையர்கள் செய்து வந்த மதச்சடங்குகள் நின்று போகின்றன. அவற்றை மறுபடியும் தொடங்கிச் செய். விவைில் சுபநிகழ்ச்சி நடைபெறும். வெற்றி கிட்டும். ஸ்ரீஸாயிநாதரை நினை.

49. வேறுபாடு காட்டாதே (பார்க்காதே). உனக்கு ஏதோ ஒன்று கிடைக்கும். முன்னேற்றம் ஏற்படும்.

50. ஒரு இளவயது நபரால் உனக்கு ஆதாயம் ஏற்படும். புதிய அறிமுகம் கிடைக்கும். கேள்வி கேட்ட தினத்திற்குப்பின் வரும் ஞாயிற்றுக்கிழமை உனக்கு ஆதாயம் ஏற்படும்.

51. பால நாட்களாக நீ இழந்து தவித்த பொருளை மீண்டும் அடைவாய். ஞாயிறன்று அது கிடைக்கும். கண்டோபராயர் கோவிலுக்குச் செல். மரங்கள் மற்றும் நிலத்தில் இலாபம் கிடைக்கும்.

52. வியாழன், வெள்ளியில் ஸ்ரீஸாயிநாதரை நினை. உனக்கு நன்மை ஏற்படும். புதிய நில விவகாரங்களில் நன்மை உண்டு. மக்கள் மகிழ்ச்சியோடு இருப்பார்கள்

53. விரைவில் 'குருபுஷ்யம்ருதயோகம்' (குரு புஷ்யநக்ஷத்திரத்துக்கு வருதல்) வருகிறது. அன்று முக்கியமான அலுவல்கள் நடைபெறும். நவம்பர், டிசம்பரில் உன் கவலைகள் மறைந்து, நீ மகிழ்ச்சி அடைவாய், புதிய வேலைகள் தொடங்கப் பெறும்.

54. செலவுகள் அதிகரிக்கும், ஆனால் ஸ்ரீராமர் பிறந்த தினத்தன்று (சைத்ர நவமி) வேலை முடிவுறும் நீ வெற்றி அடைவாய். பணமும் புகழும் கிட்டும்.

55. கடந்த இருமாதங்களாகத் தாமதமான வேலை முடிவுறும். இழந்த 'பொருளை' மீண்டும் அடைவாய் சுபமான நிகழ்ச்சிகள் நடக்கும். ஒரு மகானைச் சந்திப்பாய். ஸ்ரீஸாயிநாதர் நினைவில் கொள்.

56. புதிய கேள்விகளைக் கேட்டு சிக்கல்களை அதிகப்படுத்தாதே. ஒரு நண்பனால் நன்மை உண்டு. சுப நிகழ்ச்சி நடைபெறும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
பொறுமையின்மையால் அவதிப்படாதே. உறுவினர்களுக் கிடையில் திருமணம் நிச்சயிக்கப்படும்.

57. ஞாயிற்றுக்கிழமையிலிருந்து நன்மை ஏற்படத் தொடங்கும். வெளியூரிலிருந்து நபர்கள் வருவார்கள்; நல்ல செய்தி தருவார்கள். அவர்களுக்கு வெகுமதி அளி. உன்னுடைய நல்ல உழைப்பை ஊர் மெச்சும். எனக்குப் புகழ் சேரும்.

58. நிலம்/நீர் இவற்றிலிருந்து இலாபம் கிடைக்கும். ஸ்ரீஅக்கல்கோட் ஸ்வாமியின் ஆசி உனக்கு உண்டு. நீ வெற்றியடைவாய்

59. மூன்றாண்டுகளாக தடைப்பட்ட வேலை நன்கு முடிவுறும். சுப நிகழ்ச்சி முடிந்தவுடன் புதிய வேலை தொடங்கும். நீ பிரயாணத்திற்காகத் திட்டமிடுகிறாய். உனக்கு ஆதாயம் ஏற்படும். சிராவண (ஆகஸ்ட்) மாதத்தில் அபரிமிதமான இலாபம் கிடைக்கும்.

60. அடித்துக் கொண்டு உடலளவில் சண்டையிடுவதைக் தவிர்க்க வேண்டும். உன் வீட்டிலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ள இடத்திலிருந்து உனக்கு நன்மை ஏற்படும். ஸ்ரீஸாயிநாதரை நினை. சிறிது உடலுழைப்பு செய்தாலேயே இலாபம் உண்டு.

61. உனது சகோதரனால் நன்மை அடைவாய். நெடுநாட்களாகத் தடைபட்ட வேலை நிறைவுறும். சுபநிகழ்ச்சி நடைபெறும். ஒரு ஆண்குழந்தை பிறக்கவும் வாய்ப்புண்டு.

62. பழைய பொருட்கள் சீரமைக்கப்படும். புதிய திட்டங்கள் செயலாக்கம் பெறும். இசை, நாட்டியம் இவற்றில் ஈடுபாடு ஏற்படும். தீபாவளி நாளன்று நல்ல ஆதாயம் கிடைக்கும்.

63. நடந்து கொண்டிருக்கும் வேலைகள் நின்று போகும். இதனால் கவலையடையாதே. ஸ்ரீஸாயிநாதரை நினை. விரைவில் உன் வேலைகள் முடிந்து, வெற்றி ஏற்படும்.

64. குற்றம் சுமத்துதல் நடைபெறும். மென்மையான இதமான பேச்சுகளால் மற்றவர்களின் மனங்களைக் கவர முயற்சி செய். ஸ்ரீஸாயிநாதரை நினைவில் கொள். துயரங்கள் விலகும். உன் கிராமத்துக்கருகில் நீ வசிப்பாய்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

65. போலித் தோற்றங்கள் மறையும் உனக்கு உண்மை தெரிய வரும். மகிழ்ச்சி உண்டு. கோபப்படாதே. சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள். புதிய பொருள்கள் வந்து சேரும்

66. வேலையை முடிக்கத் திறமை போதாது. ஸ்ரீஆஞ்சநேய வழிபாடு நன்மை அளிக்கும். விடாமல் உழைத்தால் வெற்றி உண்டு. படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்

67. எதிர்பார்ப்புகள் இல்லாமல் உன் வேலையைச் செய். ஸ்ரீஸாயி நாதரை நினை. பிறகு பார் எப்படி எல்லாம் நடக்கின்றன என்று! நீ மகிழ்ச்சியடைவாய். பயிற்சிகளில் குறிப்பாக 'யோகா வில், நீ ஈடுபடுவாய்.

68. உனது குருவை நினைவில் கொண்டு அமைதியாக இரு. கற்பனைக் கெட்டாத அளவுக்கு நன்மை ஏற்படும்.

69. ஆவணங்கள் தொடர்பான வேலை தாமதப்படும். சிக்கல்களை அடையாளம் கண்டு நீயே அவற்றின் தீர்வுக்கு வழி வகுக்க வேண்டும். வெற்றி உனதே. ஸ்ரீஸாயிநாதரை நினை.

70. உணவு, உடை, பணம் தேவையான அளவு கிடைக்கும். உன் நல்வாழ்வைக் கவனிக்க ஸ்ரீஸாயிநாதர் இருக்கிறார். கடவுளை எப்பொழுதும் நினைவில் கொள்.

71. நல்லோர்கள் கூட்டுறவு ஏற்படும். ஸ்ரீராமனின் அவதார தினத்தன்று உன் வேலை முடிவுறும். நில விவகாரத்துக்குத் தீர்வு கிடைக்கும். ஸ்ரீசாயிபாபாவின் அருளாசியாலும்நண்பர்களின் ஒத்துழைப்பாலும் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

72. இரண்டு புதிய விஷயங்களால் உனக்கு மகிழ்ச்சி ஏற்படும். ஸ்ரீராமனின் அவதார தினத்தையொட்டி (மார்ச் – ஏப்ரல்) உன்து சிக்கல்கள் மறைந்து, வெற்றி கிட்டும். மத சம்பந்தமான சடங்கு நிகழும்.

73. நீ கேள்வி கேட்ட தினத்தின் மறுநாள் உனக்குத் தீர்வு கிடைக்கும். பயத்திற்கு இடமே இல்லை. பாராட்டுக்கான கௌவரத்துக்கான நாள் அருகிலேயே உள்ளது. வெற்றி, புகழ், கௌரவம் கிட்டும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

74. ஒரு சிறு தவறு செய்ததன் காரணமாக விவாதங்கள் ஏற்படும். ஸ்ரீசாயிபாபாவின் ஆசியைக் கேட்டுப் பெறுக. ஸ்ரீராம அவதார தினத்தின் அடுத்த நாள் வேலை முடிவுறும்.

75. ஆஷாட ஏகாதசியன்று ஸ்ரீராமர் அவதார தினத்தன்றும் வேலை நடக்கும். அரசாங்க வேலையை முடித்ததால் நிறைய பண வரவு உண்டு. ஸதாரா, மும்பை போன்ற இடங்களில் தங்குவாய். ஷிரடிக்கு வரும் வாய்ப்பும் கிடைக்கும்.

76. முக்கிய நபர்களைப் பார்பாய். முக்கியக் கடிதங்கள் வரும். ஸ்ரீராமர் அவதார தினத்தில் ஆதாயமும் பண வரவும், புகழும் கிடைக்கும்.

77. நல்ல (அறுசுவை) உணவு (விருந்து) கிடைக்கும். நெடு–நாட்களாகத் தடைப்பட்டிருந்த வேலை முடியும். நீ உன் வேலையை ஒரு நாளுக்குள் முடிக்க வேண்டும். கால அவகாசம் குறைவு. நீ ஒரு புதிய வீட்டில் குடிபுகுவாய்.

78. வேலையில் இடையூறுகள் வரும், கவலை வேண்டாம். உனக்குப் பண உதவி கிடைக்கும். ஸ்ரீஸாயிநாதரை நினை.

79. வேலை முடிந்ததும் நீ கௌவிரக்கப்படுவாய் எதிர்பாராதவிதமாக வேலை நன்கு முடிவுறும். வெற்றி உண்டு. ஸ்ரீஸாயிநாதரை நினை.

80. ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கொண்டாடுவாய். தகராறுகள் ஒரு முடிவுக்கு வரும்.

81. தகராறுகள் முடிவுக்கு வரும். பொருட்சேர்க்கை உண்டு.

82. அனைவருக்கும் சமமாக ஆதாயம் கிடைக்கும்.

83. வியாதியிலிருந்து குணமடைவாய். ஸ்ரீசனிபகவான், ஸ்ரீகணபதி, ஸ்ரீஆஞ்சநேயர் இவர்களை நீ வழிபட்டுக் கொண்டிருந்தால் அதைக் தொடரவும் வெற்றி உண்டு. எதிர்பாரத பொருள் வரவும் உண்டு.

84. நோயிலிருந்து விடுதலை. உடற்பயிற்சி வழக்கத்தைத் தொடர வேண்டும். நீண்ட ஆயுள் உண்டு. வெற்றி கிடைக்கும்.

85. சமுதாய வேலை நடக்கும் ஆரோக்கியம் பெறுவாய்; புகழ் உண்டு கைகளில்அடிபடக்கூடிய வாய்ப்புண்டு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

86. ஒரு விபத்திலிருந்து காப்பாற்றப்படுவாய். உனக்கு ஒ கடிதம் வரும். மகிழ்ச்சியாக இரு.

87. முயற்சிகள் பயனளிக்கும். அரசாங்க வேலை நடைபெறும். ஒரு நோயாளிக்கு மருந்து வாங்கிக்கொடு. உனக்கு நல்ல ஆதாயம் உண்டு.

88. பயத்திலிருந்து விடுதலை! நோய் நீங்கிக் சுகம் பெறுவாய்; பணிவாக நட; பின் நடப்பதைப்பார்!

89. பயணம் செய்வாய், பண்டரீபுரம் சென்று ஸ்ரீபாண்டுரங்களை தரிசிப்பாய். வெற்றி உண்டு. சிலர் ஒன்று சேர வாய்ப்புண்டு.

90. உனக்கு ஒரு கடிதம் வரும். நீ அதைக் கொண்டாடுவாய். உன்னை விருந்துக்கு அழைப்பார்கள். (ஷீர்டி) விபூதியை (சாயி உதியை) நெற்றியில் அணிந்து கொள். நடக்கும் அற்புதங்களைப் பார்.

91. மதச் சடங்குகள் நடைபெறும். பழையனவற்றை நினைவு கூர்வாய். தென்திசையில் பயணம் செய்வாய். ஒரு குழந்தை பிறக்கும்.

92. தியானம் செய். நோயிலிருந்து விடுபடுவாய்; சில நாட்களில் வேலையில் முன்னேற்றம் ஏற்படும்.

93. சொந்தம் கொண்டாடும் மனநிலையை விட்டொழி. ஸ்ரீஸாயி–நாதரிடம் சரண்டை. பிறகு எல்லாம் விரும்பியபடி நடைபெறும்.

94. நாளை வேலையை இன்றே செய்து முடி. ஸ்ரீஸாயிநாதரை நினை. வெற்றி உண்டு.

95. எதிர்பாரத ஒரு நிகழ்வினால் நீ வியப்படைவாய்! ஸ்ரீஸாயி–நாதரை நினை. செல்வம் பெருகும்.

96. நல்ல தீர்வுகளுக்கான திட்டங்களை வரைக. உனக்கு வெற்றி கிட்டும். ஸ்ரீராமனின் பெயரை ஜபி. ஒரு மகானைச் சந்திப்பாய். சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். எதிர்காலம் நன்றாக உள்ளது.

97. பாரபட்சம் பாராதே. உணவை வழங்கு. உடனே நன்மை உண்டு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

98. உனக்குமனநிறைவு ஏற்படும். உணவை வழங்கு (அன்னதானம் செய்). நாய்களுக்கும் பூனைகளுக்கும் உணவளித்தால் நன்மை ஏற்படும். விரைவில் இதை நீ உணர்வாய்.

99. குழந்தைகளுக்கு நன்மை ஏற்படும். உனக்கு வெற்றி உண்டு. உன் தாயை மறவாதே. அவர் பெயரில் அன்னதானம் செய்தால் உடனே நன்மை ஏற்படும். ஒரு மகானுக்குச் சேவை செய்யும் வாய்ப்பு கிட்டும்.

100. முதியவர்கட்கு சேவை செய்தால் நன்மை பிறக்கும். பலர் உன்னைச் சந்திப்பார்கள். நீ பிரபலமாவாய். தென் திசையில் பயணம் செய்வாய். ஒரு பழைய நண்பனை சந்திப்பாய். பழைய நினைவலைகள் தோன்றும்.

101. நல்ல சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்திக் கொள். இதனால் உன் வேலை எளிதில் முடிவுறும். நீ பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். காலையில் பயணத்தைத் தொடங்காதே. உணவு உண்டபின் பிற்பகலில் பயணத்தைத் தொடங்கு.

102. நீ பிரயாணத்திலிருந்து திரும்புவாய். ஸ்ரீஸாயிநாதரை நினை. எல்லாம் சரியாகும். நன்மை உண்டு.

103. ஸ்ரீஸாயிநாதரை நினை. பெரியவர்கள் கூறியபடி செய். பிராணயத்துக்கு வாய்ப்புண்டு. வெற்றி கிட்டும்.

104. ஸ்ரீ கஷ்டங்களைச் சந்திக்க வேண்டி வரும். ஸ்ரீஸாயிநாதரை நினை. நன்மை கிடைக்கும். தனியாகப் பயணம் செய்யாதே. ஒரு நண்பனை உடனழைத்துச் செல்.

105. கெட்ட சூழ்நிலைகள் தவிர்க்கப்படும். ஸ்ரீஸாயிநாதரை நினை. ஒரு அடையான உறுதிக் கடிதத்தின் மூலமாக வேலை முடியும். பெரியவர்கள் கூறுவது போல் செய். அவசரப் படாதே.

106. ஸ்ரீஸாயிநாதரை நினை. நீ ஒரு இக்கட்டான சூழ்நிலை–யிலிருந்து காப்பாற்றப்படுவாய். நோய்வாய்ப்பட நேரிடலாம்.

107. ஸ்ரீஸாயிநாதரை நினை. அன்னதானம் செய்தால் நன்மை அடைவாய். கஷ்டங்கள் விலகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

108. ஐந்து பெண்களின் உதவியுடன் வேலை முடிவுறும். அன்னதானம் செய். ஸ்ரீஸாயிநாதரை நினைப்பதனால் வேலை விரைவில் முடிவதை உணர்வாய்.

109. ஸ்ரீஸாயிநாதரை நினைப்பதால் உன் மனம் தூய்மை பெறும். அவர் ஆசிகள் ஏற்கனவே உனக்குண்டு. உன் தகப்பனார் செய்த தர்மங்கள் உனக்குத் துணை புரியும். வெற்றி கிட்டும்.

110. உன் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கும். உனக்கு வெற்றி உண்டு. பிரயாணம் செய்வாய்.

111. ஞானிகளின் கூட்டுறவு கிடைக்கும். உன் தவறுகளை உணர்வாய். உன் தாயால் உனக்கு மகிழ்ச்சி ஏற்படும். ஸ்ரீஸாயிநாதரின் ஆசியால் எங்கும் மகிழ்ச்சி பொங்கும். அன்னதானம் செய்.

112. ஸ்ரீஸாயிநாதரின் ஆசிகள் ஏற்கனவே உனக்குண்டு. அவரை நினனவில் கொள். பசித்தவர்க்கு உணவு அளி. உடனே வெற்றி அடைவாய்.

113. அனைவரையும் நேசி; வேற்றுமைகளை மறந்துவிடு. எல்லாம் ஸ்ரீஸாயிபாபாவுக்குத் தெரியும் என்பதை மனத்தில் கொள். அவரை நினை. தானே வெற்றி உன்னை வந்தடையும்.

114. அன்பு மேலீட்டால் என் கண்கள் குளமாகும். ஸ்ரீஸாயிபாபாவுக்கு எல்லாம் தெரியும் என்பதை எண்ணி அவரிடம் சரணடை. பிறகு பார் 24 மணி நேரத்துக்குள் என்ன நடக்கிறது என்பதை!

115. ஸ்ரீஸாயிபாபாவுக்கு இனிப்புகளை நிவேதனம் செய். மறந்து போனதற்கு மன்னிப்புக் கேள். கேட்டவை உடனே கிடைக்கும்.

116. ஸ்ரீஸாயிநாதர் உன் பக்தியைத்தான் எதிர்பார்க்கிறார். அவரை நினைவில் கொள். நீ அன்னதானம் செய்த உடனேயே உனக்கு மனநிம்மதி கிடைக்கும். நீ விரும்பிய வேலை முடிவுறும்.

117. உனது குருநாதரை நினைவில் கொள். (பிறகு) எல்லாம் நீ எண்ணிய்படி நடக்கும். பிரித்துக் கொடுப்பதன் மூலம் வேலை விரைவில் முடியும்.

118. மக்கள் பார்த்து வியக்கும் வகையில் நீ செயல்படுவாய். உனக்கு வெற்றியும், புகழும் கிட்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

119. உன் மனதைத் தெளிவாக (அமைதியாக, குளிர்ச்சியாக) வைத்துக் வைத்துக்கொள். சூழ்நிலை விரைவில் தானாக மாறும். நீ பிரயாணம் செய்வாய். புதிய பொருள்களை உருவாக்குவாய்.

120. இதுவரை தெரிந்திராத ஒன்றைப் பற்றித் தெரிந்து கொள்வாய் நீ பிரபலமடைவாய். நல்ல வழியைப் பின்பற்று வெற்றி உனதே!

121. பகல் கனவில் மூழ்கிப் பாழாகாதே. உண்மையான வழியை நாடு உன் சுய கௌரவத்தை இழக்காதே. குருவிடம் சரணடை உனக்கு வெற்றி கிட்டும்.

122. ஸ்ரீஸாயிநாதரைத் தியானம் செய். அடுத்த நாள் காலை உனக்குப் பலன் தெரியும். ஸ்ரீஸாயிநாதர் எல்லாம் அறிவார். ஆகவே நீ கவலையை விடு.

123. கேட்பவனாகவே இரு. பேசுபவனாக இராதே. ஷீரடிக்கு வர வாய்ப்புண்டு. நல்ல விருந்து கிடைக்க வழியுண்டு. நேரம் நன்றாகவே இருக்கிறது.

124. மகான்களைச் சோதித்துப் பார்க்காதே! அவர்களிடம் சரணடை. ஆண், பெண் வேறுபாடு பார்க்காதே. கனவில் வந்தபடி செய். நேரம் நன்றாக்வே உள்ளது.

125. மந்திரம், தந்திரம் இவற்றின்படி ஓடி அலையாதே! உன் இதயத்தின் அடித்தளத்திலிருந்து உண்மையாக வழிபடு. ஸ்ரீஸாயி பாபாவின் அருளாசிகள் உனக்குண்டு. பாரபட்சம் பாராதே. புதிய நிகழ்ச்சிகள் நடக்கும். ஒரு குழந்தை பிறக்கும்.

126. குருவுக்குச் சேவை, பணிவிடை செய். இதனால் உன் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும். கஷ்டங்கள் விலகும். வெற்றி அடைவாய்.

127. அழகான பொருட்களை நுகர்வாய். நல்ல மனிதர்களின் சகவாசத்தை நாடு. அதனால் உனக்கு நன்மை உண்டு.

128. உலக வாழ்க்கையில் உனக்கு ஆசை குறையும். ஸசாயிநாதரை நினை. ஓர் ஆற்றங்கரை அல்லது கடற்கரைக்குச் செல். அதனால் உனக்கு நன்மை உண்டு.

129. உன் மன அழுத்தங்கள் மறையும் குருநாதரை நினைப்பதால் இது சாத்தியமாகும். அதிகாலையில் நல்ல செய்தி கிடைக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

130. உனக்கு நல்ல இயல்பு இருக்கிறது. ஆகவே உனக்கு எல்லாம் தெரிய வாய்ப்புண்டு. வேலையைச் சரியாகப் பகிர்ந்தளி. ஒருவரை மட்டும் உன்னருகில் வைத்துக் கொண்டு இன்னொருவரை அனுப்பிவிடு.

131. கேள்வி கேட்பவர் கூடிய விரைவில் தண்ணீர் வழங்க வேண்டும். அதனால் அவர்க்கு நன்மை உண்டு. அவர் விழாக் கொண்டாடுவார்.

132. உனக்கு வேலையில் பதவி உயர்வு கிடைக்கும். வீட்டைப் பற்றிய பிரச்சினை என்றால் புதிய இடத்தில் சென்று வாழலாம். நல்ல நேரம்.

133. பாரபட்சம் பாராதே. யாராவது இன்றோ, நாளையோ உனது நெற்றியில் குங்குமம் அல்லது சந்தனம் வைக்க முன் வந்தால் அவரை அனுமதி. உடனே உனக்கு நல்ல காலம் தொடங்கும். நீ பிரயாணம் செய்வாய்.

134. உன் மனதை அமைதியாக வைத்துக் கொள். நிலைமை அதுவாகவே சீராகும். ஸ்ரீஸாயிநாதரை நினை. வெளியூரிலிருந்து நண்பர்கள் வருவார்கள்.

135. சில நாட்கள் காத்திரு. வேறு ஒரு நபர் உதவியுடன் உன் வேலை முடியும்.

136. தானம் செய். இதைத் தவிர, வேறு வழியில்லை. முன்பு திட்டமிட்ட மாதச்சடங்குகளை நீ செய்யவில்லை. இவற்றை உடனே செய். அதன் பிறகு எல்லாம் நலமாக முடியும்.

137. நீ உன்னைப் பெரியவன் என்று எண்ணிக் கொண்டால் உனக்கு வெற்றி கிட்டாது. பணிவாக இரு. பழங்கள் வாங்குவாய். பாதிக்கு மேற்பட்ட வேலை இன்று முடியும். ஸ்ரீ ஸாயிநாதரை நினை. மாலை வேளையில் தட்ப வெப்ப நிலை மாறும்.

138. கஷ்டங்கள் வரும். ஸ்ரீஸாயிநாதரை நினை. துன்பங்கள் மறையும். வெற்றி கிட்டும்.

139. எல்லா இடங்களிலும் பாபாவின் சக்தி (வியாபித்திருக்கிறது) துயரங்கள் மறையும். ஸ்ரீஸாயிநாதரை நினை. நெருப்பிலிருந்து நீ காப்பாற்றப்படுவாய்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

140. துயரங்கள் மறையும். ஸ்ரீசாயிநாதரிடம் சரணடை. ஞானிகளைச் சந்திப்பாய். தகப்பனும் பிள்ளையும் உன் வீட்டிற்கு வருவார்கள். உன் விருப்பம் நிறைவேறும்.

141. ஸ்ரீஸாயிநாதரை நினை. நீ துயரங்களைத் தாண்டுவாய். வெற்றி உனதே.

142. உனக்கு நம்பிக்கை இருந்தால்தான் உன் வேலை நடக்கும். பெரிய திட்டங்களைத் தீட்டாதே. அப்படிச் செய்தால் சிக்கலில் அகப்பட்டு கொள்வாய்.

143. வேலை தாமதப்படும். ஸ்ரீஸாயிநாதரை நினை. கோகுலாஷ்டமி (ஆகஸ்ட்) தினத்தில் உன் வேலை முடிவுறும். நீ ஞானிகளை தரிசிப்பாய். பிரயாணம் உண்டு.

144. உத்தரவின்படி நட. உன் அலுவலகத்தில் உன் உதவி தேவைப் படுகிறது. உடனே கிளம்பு. கடிதம் வரும். ஸ்ரீஸாயிநாதரின் கருணைக்காகப் பிரார்த்தனை செய். இல்லாவிடில் வயிற்று வலி நிற்காது.

145. நீதிமன்ற விவகாரங்களில், நீ குற்றமற்றவன் என்பது தெளிவாகி விடும். நோயைப் பற்றிக் கவலைப்படாதே. மதச்சடங்குகளைச் செய்வாய். ஸ்ரீ ஸாயுநாதரை நினை.

146. அமாவாசைக்குப் பிறகு உன் வேலை நடைபெறும். பிரயாணம் செய்வாய். வேலை முடிய நான்கு நாட்கள் பிடிக்கும். கவலைப்படாதே.

147. ஸ்ரீஸாயிநாதரின் அருளாசியால் உன் வாழ்க்கையில் அற்புதம் நடைபெறும். உனக்கு ஏற்ற பரிசுகள் கிடைக்கும். இது நடந்தால் நீ அதிர்ஷ்டம் உடைய நபர் என்று எண்ணிக் கொள். ஸ்ரீ ஸாயிநாதரிடம் சரணடை. வெற்றி உண்டு.

148. பகிர்ந்து கொள்வதால் நீ வெற்றி அடைவாய். ஸ்ரீஸாயிநாதரின் ஆசி எப்பொழுதும் உண்டு.

149. உன் மனத்தில் எந்த சந்தேகமும் வேண்டாம். ஸ்ரீஸாயிநாதரின் பெயரில் தானம் செய். அதன்பின் நெடுநாட்களாகத் தடைபட்ட வேலை நடைபெறும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

150. நீ உன் இஷ்ட தெய்வத்தைக் கனவில் காண்பாய். அதனால் உன் நம்பிக்கை வலுப்பெறும். பாரபட்சம் பார்க்காதே. உன் வேலை உடனே நடைபெறும்.

151. வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடக்கும். உனக்கு மன அமைதி கிட்டும். நீ நோயிலிருந்து விடுபடுவாய். நிலத்தகராறுகள் தீர்ந்துவிடும். நீ வெற்றியடைவாய்.

152. அற்புதங்கள் நடக்காததால், உனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டாலும், ஸ்ரீராமனை நம்பு. அவரிடம் பணிவாக இரு. ஒரு மகானைச் சந்திப்பாய். வெற்றி உண்டு.

153. நம்பிக்கையோடு இரு. நீ விரும்பும் நபரைப் பல நாட்களுக்குப் பிறகு காண்பாய். கேள்வி கேட்ட நாளிலிருந்து நான்கு நாட்களுக்குப் பிறகு வேலை நடைபெறும். 15 நாட்களில் விழா நடக்கும். பாரபட்சம் பாராதே.

154. உன் பழைய கவலைகள் மறைந்து விடும். நீ நோயிலிருந்து விடுபடுவாய். உன் மனத்தைத் தெளிவாகவும், உறுதியாகவும் வைத்துக் கொள். உனக்கு ஸ்ரீராமரின் தரிசனம் கிடைக்கும்.

155. "ஸாய், ஸாய்" என்று சொல். பாவங்கள் மறையும். நீ விழாக் கொண்டாடுவாய்.

156. வேலையில் மிக மும்முரமாக ஈடுபடுவாய், உனக்கு ஓய்வு நேரம் கிடைக்காது. இருப்பினும் ஸ்ரீஸாயிநாதரை நினை. உனக்கு வெற்றி உண்டு. நோயாளி குணம் பெறுவார்.

157. நீ மகிழ்ச்சியாக இருப்பாய்; ஆயினும் நோய் உள்ளது. ஸ்ரீஸாயி-நாதரை மறவாமல் நினை.

158. நோய் மற்றும் கவலை காரணமாக நீ சோர்வுற்றால் ஸ்ரீஸாயி-நாதரை நினை. நலம் பெறுவாய்.

159. துன்பங்கள், நோய்கள் இவற்றிலிருந்து விடுபடுவாய். ஷீரடிக்குச் செல். உடனே வெற்றி கிடைக்கும்.

160. கவலைப்படாதே. இரண்டே நாட்களில் உன் கவலைகள் மறையும். அன்னதானம் செய்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

161. ஒரு கருப்பு நாய்க்கு உணவளி. உன் வேலை உடனே நடைபெறும். இதை உறுதி செய்ய வேண்டுமென்றால் நீ ஒரு தையல்காரரைச் சந்திப்பாய். நோயிலிருந்து விடுபடுவாய்.

162. நோயிலிருந்து விடுதலை கிடைக்கும். பூனேயிலிருந்து நபர்கள் வந்து உன்னைச் சந்திப்பார்கள். நினைத்த வேலை முடிவு பெறும்.

163. நாட்கள் கஷ்டங்களால் நிரம்பியவை. எட்டு நாட்களில் வேலை நடக்கும்.

164. உன் ஆரோக்கியம் பாதிக்கப்படும். உன் வீட்டில் செய்ய வேண்டிய வேலை முடிவுறும். சுற்றுபுறச்சூழல் சாதரணமாக இராது. ஸ்ரீசாயிநாதரை நினை.

165. பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கும் வேலை எதிர்பாராத விதமாக முடியும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். வெற்றி கிடைக்கும். அன்னதானம் செய்.

166. விபூதி (துனி)யை நெற்றியில் அணிக. எல்லாத் துன்பங்களும் விலகும். நினைத்த வேலை நடக்கும். கஷ்ட காலம் தொடர்கிறது.

167. உனக்கு ஒரு கனவு வரும். அதில் பெரியவர்களைக் காண்பாய். அதன்படி நட.

168. நோய் நீங்கும். ஒரு மாதத்தில் எல்லாக் கவலைகளும் மறையும். ஸ்ரீஸாயிநாதரைச் சரணடை.

169. உறவினர்களைச் சந்திப்பாய். புதிய வழக்கங்களைக் கைக்கொள். உன் வீட்டில் குழந்தை பிறக்கும். உனக்கு மன நிறைவு ஏற்படும்.

170. உனக்கு முன்னேற்றம் உண்டு. அன்னதானம் செய்.

171. ஸ்ரீஸாயிநாதரை நினை, மகிழ்ச்சியான குடும்பம் அமையும். உன் எண்ணம், ஆசை நிறைவேறும்.

